# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No. 189/2025 P W.1

| பெயர்: | : | செந்தில் குமார் | த–பெ /க.பெ. | இராமன் |
|---|---|---|---|---|
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல் எஸ்டேட் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026**

----------------------------------------------------------------------------------------------------

**29.06.2026**
**<u>குறுக்கு விசாரணை</u>**

1) எதிரியை எவ்வளவு காலமாக பழக்கம் என்றால் எனது நண்பர் வாக்கி சங்கர் மூலமாக 2024 முதல் பழக்கம். எதிரி உசிலம்பட்டி கிராமத்தில் மெட்டிக்குலேசன் பள்ளி நடத்தி வந்தார் என்றால் அவ்வாறுதான் என்னிடம் கூறினார். எதற்காக எவ்வளவு தொகை என்னிடம் கேட்டார் என்றால் அவரது பள்ளியை DRT எடுத்துக்கொண்டது என்றும் அதை பணம் கட்டி மீட்டு என்னிடம் பள்ளியை ஒப்படைப்பதாக கூறினார். பணம் பள்ளியை மீட்பதற்காக கேட்டார். எவ்வளவு தொகைகேட்டார் என்றால் எதிரி ரூ.50,000,00/– மீட்பதற்காக DD வைத்திருந்தார், என்னிடம் இருந்து ரூ.40,000,00/– கேட்டார். எதிரி அவரது பள்ளியை என்னிடம் ஒப்படைப்பதற்காக பணம் கேட்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பள்ளி ஒப்படைப்பதாக கூறி ம.சா.ஆ.3 ஒப்பந்தம் கொடுத்துள்ளார். 25.02.2025 எதிரி எனக்கு சார்பாக ம.சா.ஆ.5 சொத்து பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான், அதற்கும் தற்போதைய வழக்கிற்கும் சம்பந்தம்

இல்லை.

2) 24.02.2025 எதிரி எனக்கு சார்பாக ம.சா.ஆ.4 சொத்து பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான், அதற்கும் தற்போதைய வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. அதன் தொடர்சியாக எதிரியின் சகோதரி ரஞ்சிதம், பழனியம்மாள், அம்சவள்ளி ஆகியோர்கள் 06.03.2025 ல் சம்மத பத்திரம் ம.சா.ஆ.14 எனக்கு சார்பாக நிறைவேற்றிக் கொடுத்தார் என்றால் சரிதான், ம.சா.ஆ.4,5 கிரையத்திற்காக சம்மதப்பத்திரம் ஆகும். எந்த ஒரு பணமும் பெறாமல்தான் எதிரி ம.சா.ஆ.4, 5 மற்றும் 14 எனக்கு சார்பாக நிறைவேற்றிக் கொடுத்தார் என்றாலும், பள்ளிக்காகக் கொடுத்த தொகைக்காத்ததான். ம.சா.ஆ.4,5,14 நிறைவேற்றி கொடுத்தார்ள ன்றாலும் சரியல்ல, நான் கிரையம் பெறுவதற்காக பணம் கொடுத்துள்ளேன், அதற்கும் தற்போதைய வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை.

3) 07.03.2025 ல் எதிரியுடன் ஒப்பந்த உடன்படிக்கை பத்திரம் நிறைவேற்றப்பட்டது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. ம.சா.ஆ.4,5,14 ற்கு பரிபலனாக எந்த ஒரு தொகையும் கொடுக்கவில்லை என்று 07.03.2025 தேதியுடைய பத்திரத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பள்ளியை ஒப்படைப்பதற்காக எதிரி எனக்கு எந்த ஒரு ஆவணமும் எழுதித்தரவில்லை என்றாலும், பள்ளியை விற்பனை செய்து பணத்தை கடனுக்காக என்னை எடுத்துக்கொள்ளும்படி கூறி ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.6 எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி பள்ளியை விற்றுவிட்டார் என்றும்,அந்த தொகையை எனக்கு தந்து எனது கடனை அடைத்துவிடுவேன் என்று ஒப்புக்கொண்டுதான் ம.சா.ஆ.6 எழுதிக்கொடுத்துள்ளார். பள்ளியை நான் விற்பனை செய்து அதன் தொகையை எனது கடனை அடைத்த பின் மீதி ரூ.50,00,000/– எதிரியிடம் கொடுத்து ம.சா.ஆ.4,5,14 ஐ எதிரிக்கு ஒப்படைப்பதாக 07.03.2025 தேதியுடைய ஆவணத்தில் உள்ளது என்றால் சரியல்ல, அவ்வாறு எந்த ஒரு ஆவணமும் இல்லை. 07.03.2025 ல் தேதியுடைய ஆவணம் நிறைவேற்றும்போது கூடுதலாக எதிரியின் 13 நிரப்பப்படாத காசோலைகள் மற்றும் நிரப்பாத புரோநோட்டுகள், மற்றும் நிரப்பாத பத்திரங்கள் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

4) பள்ளிக்காக ரூ.40,00,000/- DRT க்கு முதல் தவணையாக செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். இரண்டாவது தவணை எதிரி கேட்டபோது ம.சா.ஆ.4,5,14 பெற்றுக்கொண்டுதான் இரண்டாவது தவணை செலுத்தினேன் என்றால் சரியல்ல. ஆவணங்களுக்கும் தற்போதை வழக்கிற்கும் தொடர்பு இல்லை, இரண்டாவது தவணை எதிரிகேட்டுக்கொண்டதால் நான் செலுத்தினேன். நான் எதிரி மற்றும் அவரது மனைவி சேர்ந்து முழுமையாக DRT க்கு பணத்தை செலுத்தும் சமயத்தில் பள்ளியை வேறு ஒரு நபரான ராணி என்பவதுக்கு auction மூலம் விற்பனை செய்து விட்டதாக கூறிவிட்டார் என்றால் நான் அப்போது செல்லவில்லை, அது பற்றி எனக்கு அப்போது தெரியாது, நான் விசாரித்த பின்புதான் auction ஆன விபரம் தெரியவந்தது. auction விற்பனை செய்த பின்பு எதிரியும் அவரது மனைவியும் சேர்ந்து ம.சா.ஆ.4,5,14 ஐ எதிரிக்கு மறுகிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அதற்கு அடமானம் பதிந்து தருவதாக என்னிடம் கூறினார் என்றாலும், அதற்கு நான் ஒப்புக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. auction விற்பனைக்கு பின்பு எதிரி என்னிடம் விற்பனை செய்து விட்டதாக கூறி எனக்கு தரவேண்டிய தொகையை தந்துவிடுவதாக கூறிதான், ம.சா.ஆ.6 எதிரி எனக்கு எழுதிக்கொடுத்தார்.

5) நான் பள்ளிக்காக கொடுத்த கடன் தொகையை விட ம.சா.ஆ.4,5 சொத்தின் மதிப்பு அதிகம் என்றால் அதற்கும் தற்போதைய வழக்கு கடனிற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை, அது தனிக்கிரையம் ஆகும். நான் கிரையம் பெற்றிருந்தாலும், அந்த சொத்தை தற்போது வரை எதிரிதான் உடைமையில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான், நான் உடைமையை எடுப்பதில் இருந்து தடுத்து என்னை கொலை மிரட்டி வருகிறார். நான் சொத்திற்காக தொகையை எதிரிக்கு கொடுக்காததால்தான் அதன் அனுபவம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல, அதற்கான தொகையை கொடுத்துவிட்டேன். 02.05.2025 ல் இடத்தை எடுப்பதற்காக செய்தேன் என்றால் சரிதான், கொலைமிரட்டல் செய்து என்னை அனுப்பிவிட்டார்கள். எனக்கு சார்பாக உள்ள ம.சா.ஆ.4,5 கிரையம் மற்றும் அந்த சொத்திற்காக நான் பெற்ற பட்டா அனைத்து செல்லுபடி ஆகாது என்றும், உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு 06.05.2025 ல் மதுரை

முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் OS 245/2025 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், நான்அந்த வழக்கை நடத்தி வருகிறேன். OS 245/2025 வழக்கு தாக்கல் செய்த பின்புதான் வழக்கு காசோலை ம.சா.ஆ.7 மற்றும் 9 யை நான் வசூலுக்கு செலுத்தினேன் என்றால் பணம் தரவில்லை என்பதற்காக செலுத்தினேன்.

6) ம.சா.ஆ.7 மற்றும் 9 ஐ எதிரி கையொப்பமிட்டு நிரப்பாமல் கொடுத்தார் என்றாலும், நான்தான் காசோலைகளை நிரப்பியுள்ளேன் என்றாலும் சரியல்ல, எதிரி தரவேண்டிய தொகைக்கா நிரப்பியபடி காசோலை கொடுத்தார். யார் நிரப்பினார்கள் என்று எனக்கு தெரியாது. ம.சா.ஆ 7 மற்றும் 9 ல் கையொப்பதில் உள்ள மையும், நிரப்பியுள்ள மையும் வேறுபட்டு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எதிரி நிரப்பியபடி காசோலை கொடுத்தார். ம.சா.ஆ.7,9 வசூலுக்கு தாக்கல் செய்த சமயத்தில் எனது சகோதரர் சங்கர்ராமன் ரூ.46,76,000/-ற்காக எதிரியின் காசோலை 038989 யை வங்கியில் செலுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்கூறிய விபரங்களை எதிரி அவரது பதில் அறிவிப்பில் கூறியுள்ளார் என்றால் சரிதான். நான்தான் எதிரி மற்றும் எதிரியின் குடும்பத்தாரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல, என்னை ஏமாற்றுவதற்காகத்தான எதிரி பணம் பெற்று அதை திருப்பி செலுத்தவில்லை. மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி எதிரி எந்த குற்றமும் புரியவில்லை என்றால் சரியல்ல. தற்போதைய வழக்கு சட்டப்படி நிலைநிற்றதக்கதல்ல என்றால் சரியல்ல, போதிய ஆவணம் என்னிடம் உள்ளது. ம.சா.ஆ.4,5 ல் உள்ள சாட்சிகள் சாட்சியாக சொல்ல தயாராக உள்ளார் என்றால் அவை எதிரியின் சாட்சிகள் ஆகும், அதற்கும் தற்போதைய வழக்கிற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.29 18:04:02 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.